# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2024 – 2025

## வளர்தமிழ் 9

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100


www.tamiledc.com
Tamil Education Development Council
France

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. இலங்கையிலிருந்து தமிழகம் முழுவதையும் ஆண்ட மன்னன்

அ) சங்கிலியன் ☐ ஆ) இலக்குமணன் ☐

இ) இராவணன் ☐ ஈ) வீடணன் ☐

2. ஆட்டத்து மங்கையர் போல் மொய்த்து நின்ற பயிர்

அ) குரக்கன் ☐ ஆ) வரகு ☐

இ) நெல் ☐ ஈ) கம்பு ☐

3. புத்தர் இலங்கை வருவதற்கு முன் வடபகுதி ———— என அழைக்கப்பட்டது.

அ) நாகதீபம் ☐ ஆ) கல்யாணி ☐

இ) வன்னி ☐ ஈ) கொழும்பு ☐

4. ஓடஓட என்பது

அ) அடுக்குத்தொடர் ☐ ஆ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

இ) இணைமொழி ☐ ஈ) இரட்டைக்கிளவி ☐

5. வந்த என்பது

அ) வினையெச்சம் ☐ ஆ) பெயரெச்சம் ☐

இ) வினையடி ☐ ஈ) வினைமுற்று ☐

6. புதியதொருவீடு நாடகத்தை எழுதியவர்

அ) பாரதியார் ☐ ஆ) உருத்திரமூர்த்தி ☐

இ) பாவேந்தர் ☐ ஈ) தனிநாயகம்அடிகள் ☐

7. கலைஞன் என்ற சொல்லின் பகுதி

அ) அன் ☐ ஆ) ன் ☐

இ) ஞ் ☐ ஈ) கலை ☐

8. குதிரை கனைக்கும். அது போல் சிங்கம்

அ) கத்தும் ☐ ஆ) முழங்கும் ☐

இ) ஊளையிடும் ☐ ஈ) உறுமும் ☐

9. 'கோ' என்ற சொல் குறிப்பது

அ) புலவரை ☐ ஆ) ஆசிரியரை ☐

இ) மன்னனை ☐ ஈ) கவிஞனை ☐

10. வீரன் படுகளத்தில் விளையாடி வினை முடிக்கிறான். இதில் படுகளம் என்பது

அ) போர்க்களம் ☐ ஆ) பாசறை ☐

இ) ஆடுகளம் ☐ ஈ) அரண்மனை ☐

11. கெடுதற் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தேன்தமிழ் ☐ ஆ) பற்பசை ☐

இ) தமிழ்ப்புலவர் ☐ ஈ) வட்டமேசை ☐

12. பண்டைய தமிழர்கள் வெளிநாடுகளுடன் வணிகம் செய்தனர் என்பதற்கான சான்றுகளில் ஒன்று

அ) கோவில்கள் ☐ ஆ) ஈமத்தாழிகள் ☐

இ) வெளிநாட்டு நாணயங்கள் ☐ ஈ) ஈமப்பொருட்கள் ☐

13. நீங்கள் உண்மை பேச வேண்டும் என்று ஆசிரியர் கூறினார். இச் சொல்லியம்

அ) கலப்புச்சொல்லியம் ☐ ஆ) வினாச்சொல்லியம் ☐

இ) மெய்ப்பாட்டுச்சொல்லியம் ☐ ஈ) ஏவற்சொல்லியம் ☐

14. ''பால் கொண்டு மடுப்பவும் உண்ணான்'' இப்பாடலைப் பாடிய புலவர்

அ) பொன்முடியார் ☐ ஆ) ஔவையார் ☐

இ) பூங்குன்றனார் ☐ ஈ) திருத்தக்கதேவர் ☐

15. பெருங்கற்கால மக்களின் தொழில்களில் ஒன்று

அ) நெசவுத்தொழில் ☐ ஆ) வேட்டையாடல் ☐

இ) வணிகம் ☐ ஈ) கடற்றொழில் ☐

16. தனிநாயகம் அடிகளார் இறுதியாக எழுதிய நூல்

அ) தமிழ்ப்பண்பாடு ☐ ஆ) தமிழியல் இதழ் ☐

இ) தமிழ்மறை விருந்து ☐ ஈ) தமிழர் வணிகம் ☐

17. சார்பெழுத்துகள்

அ) 217 ☐ ஆ) 18 ☐

இ) 30 ☐ ஈ) 247 ☐

18. திருக்குறளைக் கடைக்கழக காலத்தில் அரங்கேற்றச் செய்தவர்

அ) திருவள்ளுவர் ☐ ஆ) தொல்காப்பியர் ☐

இ) ஔவையார் ☐ ஈ) இளங்கோ ☐

19. வல்லின மெய்யெழுத்துகளில் ஒன்று

அ) ன் ☐ ஆ) ற் ☐

இ) ந் ☐ ஈ) ய் ☐

20. போனான் என்பதன் இடைநிலை

அ) ஆன் ☐ ஆ) போ ☐

இ) இன் ☐ ஈ) ன் ☐

21. தனிநாயகம் அடிகளாரின் இயற்பெயர்

அ) சேவியர் ☐ ஆ) தேவநேசன் ☐

இ) வரதன் ☐ ஈ) சுப்புரத்தினம் ☐

22. கடலறிவு என்பதில் அறிவு என்பது

அ) உவமானம் ☐ ஆ) உவமேயம் ☐

இ) பொதுத்தன்மை ☐ ஈ) உருவகம் ☐

23. ____________ என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள் சிந்துவெளிச் சிற்பங்களை ஒத்திருந்தன.

அ) கந்தரோடை ☐ ஆ) திருகோணமலை ☐

இ) ஆனைக்கோட்டை ☐ ஈ) ஆனைவிழுந்தான் ☐

24. தே + ஆரம்

அ) தேவ்வாரம் ☐ ஆ) தேஆரம் ☐

இ) தேவாரம் ☐ ஈ) தேவரம் ☐

25. வெத்திலை என்னும் பேச்சு வழக்குச் சொல்லை செவ்வழக்காக மாற்றினால்

அ) வெத்தலை ☐ ஆ) வெற்றிலை ☐

இ) வெற்றலை ☐ ஈ) வெற்ரிலை ☐

புள்ளிகள் 25

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

சோழ மன்னர் மரபிலிருந்து தோன்றியவனே கரிகாலன். இவனது தந்தை இளஞ்சேட்சென்னி. கரிகாலன் தாய் வயிற்றில் இருக்கும்போதே அவனது தந்தை இறந்துவிட்டார். கரிகாலன் சிறுவனாக இருந்தமையால் நாட்டை ஆள்வது வேறு மன்னர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் சூழ்ச்சி செய்து கரிகாலனை உறையூர் அரண்மனையில் இருந்து விரட்டினர். கரிகாலன் பகைவரின் கையில் அகப்படாது மறைந்திருந்து வாழ்ந்தான். நீண்டகாலம் சோழநாடு அரசன் இல்லாமல் அவதியுற்றதால் மரபுமுறைப்படி அரண்மனை யானையைக்கொண்டு ஓர் அரசனைத் தேர்ந்தெடுக்க முயன்றனர். அதற்காக யானையை அழகுபடுத்தி அதன் கையில் ஒரு மாலையைக் கொடுத்து யானையின் பின்னே சான்றோர்களும் வீரர்களும் சென்றனர். அரசனாக வேண்டும் என்று விரும்பியவர்கள் யானையின் முன்னே போய் நின்றனர். அவர்களைப் பொருட்படுத்தாது மறைந்து வாழ்ந்த கரிகாலன் முன் போய் நின்ற யானை, அவன் கழுத்தில் மாலையிட்டது. அது கரிகாலனைத் தூக்கி அரண்மனைக்குக் கொண்டு சென்றது. யானையால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் இளஞ்சேட்சென்னியின் மகன் கரிகாலன் என்பதைக் கண்ட சான்றோர்கள் களிப்படைந்தனர். அவர்கள் கரிகாலனுக்கு முடிசூட்டினர். அரியணையில் ஏறிய கரிகாலன் செங்கோல் ஆட்சிபுரியத் தொடங்கினான்.

1. கரிகாலனின் தந்தையின் பெயர் என்ன?

______________________________________________

2. ஏன் சான்றோர்கள் களிப்படைந்தனர்?

______________________________________________

______________________________________________

3. செங்கோல் ஆட்சி புரிந்தவன் யார்?

______________________________________________

4. கரிகாலன் எம் மரபிலிருந்து தோன்றியவன்?

______________________________________________

5. மன்னர்கள் சூழ்ச்சி செய்து கரிகாலனை எங்கிருந்து விரட்டினர்?

______________________________________________

**புள்ளிகள் 10**

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. கவிஞர் விளைநிலத்தைப் பாறை என்று கூறுவதற்குக் கரணியம் என்ன?

______________________________

2. மகாவம்ச காலத்திற்கு முன்பே நாகதீபம் பற்றிக் குறிப்பிட்ட நூல் எது?

______________________________

3. ''போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க!'' இக் கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

______________________________

4. இலங்கையில் எவ்விடங்களில் இயக்கர், நாகரின் அரசுகள் இருந்தன?

______________________________

5. ''சிறுநண்டு மணல்மீது படமொன்று கீறும்'' என்ற பாடல் யாரின் வாழ்க்கையோடு தொடர்புடையது?

______________________________

6. தனிநாயகம் அடிகளார் திருக்குறளை எவ்வெவ் மொழிகளில் மொழி மாற்றுவித்தார்?

______________________________

7. மீனவர்கள் எதைக்கொண்டு காலமறிந்து கடலோடுகின்றனர்?

______________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

## ஏர்த்தொழில்

| | | | | |
|---|---|---|---|---|
| பொங்கல் | தொழில் | ஒன்றே | வெள்ளியும் | செல்வம் |

உழவுத் தொழிலே உணவு தரும்
உடையும் அதனால் அணியவரும்
பழகும் மற்றைய ____________________ யாவும்
பயிர்த் தொழில் இன்றேல் வீழ்ந்துவிடும்

உழவே ____________________ உண்டு பண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டு வரும்
உழவைத் தொழுதிட வருநாளே
உற்ற ____________________ திருநாளாம்

தங்கமும் ____________________ இருந்தாலும்
கூலம் ____________________ விருந்தாகும்
இந்த உண்மையை உணர்த்திடுவோம்
ஏர்த்தொழில் மிகுந்திடத் துணிந்திடுவோம்

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

ஆகா! மருதநிலத்தில் காணப்படும் நெல்வயல்கள் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கின்றன. நெற்பயிர்கள் பச்சைப்பசேல் எனக் காட்சியளிக்கின்றன. அருகே வாய்க்காலில் நீர் சலசல என ஓடிக்கொண்டிருக்கின்றது. உழவர்கள் வயலில் வேலை செய்யும் காட்சியும் வயல் வரம்புகளில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமென கொக்குகள் காத்திருக்கும் காட்சியும் மனதுக்கு மகிழ்வைத் தருகின்றன.

1. இரட்டைக்கிளவி ஒன்று தருக.

___________________________________________

2. உயர்திணைப் பன்மைச்சொல் ஒன்று தருக.

___________________________________________

3. 7 ஆம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் ஒன்று எழுதுக.

___________________________________________

4. இயல்புப் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டுத் தருக.

___________________________________________

5. உரிச்சொல் ஒன்று எழுதுக.

___________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வரும் சொல்லியங்களிலுள்ள செயப்படுபொருளைக் கண்டறிந்து எழுதுக.**

1. புலவர்கள் தமிழ்மொழியைப் போற்றி வளர்த்தனர்.

___________________________

2. மாதவி முல்லைக்கொடியிலுள்ள பூக்களைக் கொய்தாள்.

___________________________

3. அழகன் கவிதையை உரத்து வாசித்தான்.

___________________________

புள்ளிகள் 03

**2.** மொழிக்கு முதலில் மட்டும் வரும் வினா எழுத்துகள் எத்தனை? அவை எவை?

_________________________________________________________________

புள்ளிகள் 02

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. உழவன் விரித்த ______________ யில் எலி சிக்கியது. அது தனது ______________ க்குப் போக முடியாமல் தவித்தது.

   ( வளை, வலை )

2. கோயில்மணி கணீர்கணீர் என ______________ எழுப்பியது. அவ்வேளை கதிரவன் ______________ பரப்பி இருளை அகற்றினான்.

   ( ஒளி, ஒலி )

3. பசுமையான பரந்த ______________ வெளி ஒன்று காணப்பட்டது. அங்கே ______________ இனங்கள் பறந்து திரிந்தன.

   ( புல், புள் )

4. ______________ யைச் சுற்றி மரங்கள் காணப்பட்டன. சிறுவர்கள் மரக்கிளைகளில் ______________ க் கனிகளைப் பறித்து உண்டனர்.

   ( ஏறி, ஏரி )

5. சேரன் காட்டுக்குச் சென்று இலை ______________ களை வெட்டினான். அவன் அவற்றைத் ______________ யில் சுமந்து சென்றான்.

   ( தலை, தழை )

புள்ளிகள் 05

**7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**உழவர்கள் பயிர் செய்வதற்கு நீர் அகத்தியமானது. முற்காலத்தில் மன்னர்கள் குளங்களை அமைத்துப் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தனர். பழங்கால மக்கள் ஆற்றங்கரைகளில் வாழ்ந்தனர். அவர்கள் ஆற்றுநீரைப் பயிர்ச்செய்கைக்கும், வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தினர். ஆற்றங்கரைகள் பசுமையாகக் காணப்படும்.**

புள்ளிகள் 05

**8) பழமொழிகளுக்குப் பொருத்தமான சொற்களை வைத்து நிறைவு செய்க.**

1. சித்திரமும் கைப்பழக்கம் ____________________ நாப்பழக்கம்.

2. குற்றம் ____________________ சுற்றமில்லை.

3. கையில் வெண்ணெயிருக்க ____________________ க் கலையாதே

4. நிழலின் அருமை ____________________ தெரியும்.

5. தூரத்துத் தண்ணீர் ____________________ உதவாது.

புள்ளிகள் 05

**9) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.**

1. செயற்கரிய யாவுள ____________________ அதுபோல்

வினைக்கரிய யாவுள காப்பு

( நட்பின், கற்பின், வருமுன் )

2. புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை

____________________ காணப் படும்

( பொய்மையால், நேர்மையால், வாய்மையால் )

புள்ளிகள் 05

**10) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழின் காவலர் தனிநாயகம் அடிகளார்
- இலங்கையின் முதற்குடிகள்
- மரங்கள் நாட்டுவதன் அகத்தியம்
- உம்மால் மறக்கமுடியாத நிகழ்வு

புள்ளிகள் 15